ஜனவிநோதினி.

இல. 2. பெப்ருவரி மீ 1871. புஸ்த. II.

வாலிபத்திற் செய்யவேண்டிய பழக்கங்கள்.

(தொடர்ச்சி.)

ஆறுவது. யாரைக்கண்டு பேசினாலும் அவரிடத்திலிருந்து ஏதாவது கற்றுக்கொள்ளப் பார்க்கவேண்டும்

இந்தப் பழக்கமுடைய வாலிபன் நாற்பதுவயதாகிறதற்கு முன் அநேக விஷயங்களை அறிந்து காரியசமர்த்தனாகிறதுமன்றி, நாலுபேர் கூடியசபையில் பலசங்கதிகளையும்பற்றிப் பயன்படச் சம்பாஷிப்பதற்குப் பாத்திரனுமாவான். கண்டுபேசுகிற ஒவ்வொருவரிடத்தும் பலகாரியங்களைப்பற்றிச சம்பாஷிப்பது எல்லோர்க்கும் இயல்புதானென்றாலும், தாம் அறியாத காரியங்களை அவர் அறிந்திருந்தால் அவற்றை அவரிடத்திலிருந்து கிரகித்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்துடன் சமபாஷிக்கிறவர்கள் அருமை; அதிலும் இதை ஒரு விதியாக அனுஷ்டித்துப் பழக்கஞ்செய்துகொள்ளுகிறவர்கள் மிகவும் அருமை. இதனாலேதான் அறிவுடையோரைக் காண்பதும் அருமையென்கிறோம. சிரிப்பு, விளையாட்டு, நேரப்போக்கு, தற்கால சந்தோஷமென்றிவற்றின்பொருட்டு பிறரோடு சம்பாஷிக்கிறவர்கள் அனந்தம். அறிவு பெருகும்பொருட்டுக் கேள்விப்படுகிற ஒவ்வொரு நூதனத்தையும் தமது ஞாபகமாகிய களஞ்சியத்தில் சேர்த்துவைக்கிறவர்கள் மிகவுஞ் சொற்பமாம். இதற்குக் காரணம் யாதெனில், இந்தப் பழக்கத்தினால் இவ்வளவு பிரயோஜனமுண்டென்று புத்தியிற் படுமுன்னதாக அநேகருக்கு நாற்பது ஐம்பது வயதாய் விடுகின்றது; அப்புறம் அவர்கள் ஆசித்தும் அடைய ஏதுவில்லை. ஆதலால் வாலிபத்திலேயே இந்தப் பழக்கஞ்செய்துகொள்ளவேண்டும்.

ஒருவன் என்ன அலுவற்காரனுயிருந்தாலுஞ்சரி, எப்படிப் பட்ட மூடனுனுலுஞ்சரி, அவனுேடு சற்றுநேரமாவது சம்பாஷிக் கும்படி இடங்கிடைத்தால், தாம் முன் அறியாததும், தமக்கு மிகுந்த பிரயோஜனமுள்ளதுமான சில விஷயங்களை அவனிடத் திலிருந்து கற்றுக்கொள்ளாத நாளில்லையென்று (Sir Walter Scot) சார் உவால்டர் ஸ்காட் என்பவர் சொல்லுகிறுர். அவர் அறியாத காரியமில்லையென்று எல்லோருஞ் சொல்லத்தக்க அவ்வளவு அறிவை அவர் அடைந்ததற்குக் காரணம் இந்தப் பழக்கமே. திறந்தகண்ணேடு உலகிற் சஞ்சரிப்பதினுல் எவ்வளவு பிரயோஜன முண்டோ அவ்வளவு பிரயோஜனமுண்டு திறந்த செவியோடு எவ ரோடுஞ் சம்பாஷிப்பதினுலும். இந்த விஷயத்தைப்பற்றி (Cicil) சிசில் என்பவர் சொல்லுகிறதைக் கேள்: "நான் சிறுவனுயிருக்கை யில் என் தாயிடத்தில் மிகுந்த புத்திசாலியாகிய ஒரு வேலைக்காரியி ருந்தாள். ஒருநாள் ஒரு தைலம் இறக்கும்படி அது தெரிந்த ஒரு வனைத் திட்டஞ்செய்து, அவன் அந்தத் தைலம் வடிக்குமுறை யைக் கிட்டயிருந்து பார்த்துப் படித்துக்கொள்ளும்படி அந்த வே லைக்காரிக்குக் கற்பித்திருந்தது. அப்படியே அவள் கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், அவளால் கிரகிக்கக்கூடாத சில கா ரியம் நடக்கக்கண்டு, அதை அறிந்துகொள்ளும்படி அவனை வின வினுள். அதற்கு அந்த மனுஷன்: சீ, புத்தியற்றவளே! உனக்கு இவ்வளவுத் தெரியாதா என்று சொல்லி மரியாதைக்குறைச்ச லாய்த் திட்டினுன். அதற்கு அவள் பதில் ஒன்றும் சொல்லாமல் மிகுந்த பொறுமையோடு அதைச் சகித்துக்கொண்டதைப்பார்த்து என் தாய் ஆச்சரியப்பட்டு, அவளை நோக்கி: நீ எப்படி இதைச் சகித்துக்கொண்டாயென்று கேட்க, அவள்: நான் அந்த மனுஷனி டத்திலிருந்து பெற்றுக்கொண்ட அறிவினிமித்தம் இதைப்பார்க்கி லும் ஆயிரமடங்கு அதிகம் அவன் சொன்னுலும் கேட்டுக்கொள் வேன் என்றுள்." நமமுடைய வேலையையும் படிப்பையுந்தவிர மற் றொன்றும் நமக்குத் தெரியவேண்டிய அவசியமில்லையென்று சிலர் கொண்டிருப்பது மெத்தப் பிசகான அபிப்பிராயம். பல தொழில் களையும் பல காரியங்களையும்பற்றிப் பலரோடும் சம்பாஷித்து, அவற்றில் கொஞ்சங்கொஞ்சம் அறிந்திருப்பது நம்முடைய வே லையில் நாம் மிகுந்த சமர்த்தராய் விளங்குவதற்கு அநுகூலமே யொழிய வேறில்லை. ஒவ்வொரு மனுஷனுக்கும் அதனதன் சொ

ந்த அலுவலையும் தொழிலையும் பற்றி நாம் அறியாததும், அறிந்தி ருந்தால் நமக்கு மிகுந்த பிரயோஜனத்தை வருவிக்கத்தக்கதுமாகிய பலகாரியங்கள் தெரிந்திருக்கும். ஆதலால் கூடிய சமையங்களி லெல்லாம் அவற்றைக் கேட்டு வினவி, பிரயோஜனமானதைக் கிரகித்து மனதில் பத்திரப்படுத்திக்கொள்ளவேண்டும். "எப்பொ ருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு."

இதனாலே நீ சகலத்தையும் கற்றறியப் பிரயாசப்படவேண்டு மென்று நாம் சொல்லவில்லை. அது ஒருவராலும் முடியாது. முடி யாத அந்தக்காரியத்தில் காலம்போக்குகிறவன், நடக்கப் பறக்க நீந் தக் கற்றும் ஒன்றும் நன்றாய்த் தெரியாத வாத்துப்போல ஒன்றுக்கும் உதவாதவனாய்ப்போவான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் ஒரு தகுந்த காரியத்தைப் பிரதானமாகக்கொண்டு அதைத் தேடு கிறபோது, மத்தியில் அகப்படுகிற விஷயங்களையும் அலட்சியஞ் செய்யாமல் அல்லது மேற்பராக்காய் கவனமின்றி விட்டுவிடாமல் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றுமாத்திரம் சொல்லுகிறோம். திருஷ்டாந்தமாக: நீ ஒரு பெரிய காரியத்தையிட்டு தூரதேச பிரயாணஞ்செய்துவரக் கருதிச் செல்வாயானால், நீ வழியில் கா ண்கிற விசேஷித்த காரியங்களையும் செய்கைகளையுங் கவனித்துக் கொண்டு போகமாட்டாயா? இப்படிக் கவனிப்பதால் உன் பிர யாணத்துக்காவது, நீ கருதிச்செல்லும் கருமத்துக்காவது இடையூறு வருமா? இல்லை. அது உன் பிரயாணத்தை இன்பமாக்கி, உன் கா ரியத்தைத் திறமையாய் முடிப்பதற்கு வழிசெய்து, நீ அதிக புத்தி யும் அறிவுமுள்ளவனாய்த் திரும்பிவர ஏதுபண்ணுமேயொழிய வேறில்லை. சில விஷயங்களைப் பிரதானமாகக்கொண்டு கற்றுவரு கையில், அதற்கு அநுகூலமான காரியங்களையும் கதைகளையும் காரணங்களையும கண்டால், அவற்றைக் கவனித்துக் கருத்துள் அமைத்துக்கொள்ளும் பழக்கமானது நாம் காரியசித்தியும், கூரிய புத்தியும், தேர்ந்த அறிவுமுள்ளவர்களாவதற்கு நல்லவழியாம்.

அர்த்தசாஸ்திரம்.

(தொடர்ச்சி.)

இரண்டாவது: முயற்சியின்றிச் சோம்பியிருக்கிறவர்கள் தங்களுடைய சோம்பலால் வரும் பலனைத் தாங்களே அநுபவிக்கும்படி விட்டுவிடவேண்டும்.

மாந்தரனைவரும் உழைத்து ஜீவனஞ்செய்யவேண்டுமென்று கடவுள் விதித்திருக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்விதியை மீறித் தங்களிஷ்டப்படி நடக்க விரும்புகிறவர்கள், அவ்விதி கடந்தலால் வருங்கேட்டை அநுபவிக்கும்படி விட்டுவிடுவது அநியாயமல்ல. சரீர ஆத்மங்களைப்பற்றிய விஷயங்களில் எந்தெந்த விதிகள் உண்டோ, அந்தந்த விதிகளை அவரவர் அநுசரித்தாவது மீறியாவது நடக்கிற அளவுக்குத் தக்கதாக அதற்குரிய பலாபலனை அடைந்து அநுபவிக்கும்படி கடவுள் அமைத்திருக்கிறாரென்று ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. ஒருவன் கஷ்டப்பட்டுப் படித்து மனோவிர்த்தியடைந்து நல்லறிவைச் சம்பாதித்துக்கொள்ளாவிட்டால், அவன் அறியாமையால் வரும் சங்கடங்களுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டு வருந்துகிறதைக் காண்கிறோம். அவ்வாறே ஒருவன் நீதிப்பிரமாணங்களுக்கு இசையத் தனது இச்சைகளை அடக்கி நல்லொழுக்கத்தில் நடாவிட்டால், அவன் விரைவில் கெட்டுத் துன்மார்க்கனாய்ப்போகிறதையும் பார்க்கிறோம். ஒருவன் கஷ்டப்பட்டு வேலைசெய்யாமல் சும்மா குந்திக்கொண்டு சோம்பலில் தன் காலத்தையெல்லாம் கழித்துவிட்டால், அவன் அதிசீக்கிரத்தில் உண்ணச்சோறும் உடுக்க வஸ்திரமுமின்றி, அலைகிறதையும் காணலாம். இதனால் ஏற்படுகிறதென்னவெனில், நமது சரீர ஆத்ம தத்துவங்களை உபயோகப்படுத்துகிற அளவுக்குத்தக்கதாக நன்மையையாவது தீமையையாவது அடைகிறோமென்பதே.

இவ்வாறு கடவுள் நமது முயற்சிக்கும் சோம்பலுக்கும் தக்கவாறு சுகத்தையும் துக்கத்தையும் அளந்து வைத்திருக்கிறது சகல விஷயத்திலும் நமக்கு நன்மையேயொழியக் கேடில்லை. நமது சரீர அவயவங்களையும் மனஸ்தத்துவங்களையும் சுகமும் பலமுமாய்ப் பாதுகாத்துக்கொள்வதற்கு முயற்சியே நல்ல மருந்தாம். ஆழ்ந்து யோசித்துக் கருத்தூன்றிப் படிக்கிற மாணாக்கனுடைய

மன்துக்கும் யாதொரு பிரயாசையுமின்றி வீண்கதைகளை வாசித்துக் காலம்போக்குகிற ஒருவனுடைய மனதுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம். நன்றாய் முயற்சிசெய்து உழைக்கிற ஒரு சமுசாரிக்கும் சிற்றின்பத்தில் ஆழ்ந்து தவிக்கிற ஒரு காமுகனுக்கும், தேகபலத்தில் உண்டாயிருக்கிற பேதத்தைத் தெரிவிக்கவேண்டியதில்லையே. முயற்சியினால் வேறொரு பலனுமில்லையென்று வருமானாலும், சோம்பலைப்பார்க்கிலும் அது ஆயிரமடங்கு உத்தமமென்று அறியவேண்டும். சுகத்துக்கும் இன்பத்துக்கும் காரணம் முயற்சியே; துக்கத்துக்கும் துன்பத்துக்கும் ஊற்று சோம்பலே! ஆதலால் கடவுள் தமது அனந்தஞானத்தினாலும் காருண்ணியத்தினாலுமே மனிதனை முயற்சிசெய்ய ஏவும் பொருட்டு இந்த நன்முறையை ஏற்படுத்தியிருக்கிறார்.

தேவநீதி இப்படியிருப்பதால், அதற்கிசையத் தேசச்சட்டங்களை நிர்மானித்து எவனானாலும் தனக்குத் தேவையானதை அதற்குத்தகுந்த முயற்சியினாலன்றி வேறுவகையாலடைய ஏதுவில்லாதபடி ஒழுங்குசெய்வது அநியாயமல்ல; அது முற்றும் நியாயமேயாம். ஒவவொருவனுடைய முயற்சியைப்பற்றியும் அவனவனிஷ்டத்துக்கு விட்டுவிட்வேண்டுமேயொழிய பலவந்தமாகாது. ஒருவன் தனக்குத் தேவையானதை இஷ்டமானால் முயற்சியினால் சம்பாதிக்கலாம்; இல்லையென்றால் அஃதின்றித தன்னிஷ்டப்படி சும்மாயிருக்கலாம் என்ற ஏற்பாடு இருக்கவேண்டும். இவ்வித ஏற்பாட்டினால் ஒவ்வொருவரும் அக்கரைப்பட்டுத் தன் தனக்கென்று பொருள் சம்பாதிக்கும்படி முயலவும், முயற்சியற்றிருக்கிற சோம்பேறிகள் முட்டுப்பட்டு முயற்சிசெய்யத் துணியவும், முயற்சியுடையோரெல்லாம் உத்சாகமும் களிப்புமடைந்து தங்கள் முயற்சியைக் கைவிடாதிருக்கவும், அதனால் தொழில்கள் விர்த்தியடைந்து தேசம் செழித்து ஜனங்கள் வாழ்ந்திருக்கவும் ஏதுவுண்டு. தேவநியமத்துக்கு இசைந்த இந்த நல்ல ஏற்பாட்டை நியாயமல்ல என்று இகழ்ந்து, ஒரு மனுஷன் கஷ்டப்பட்டுத தேடிய பொருளையெடுத்துக் கஷ்டப்படாமல் சோம்பித்திரிகிற இன்னொரு மனுஷனுக்குக கொடுப்பதுதான் அநியாயமும தேசத்திற்கு ஹானியுமாம்.

என்னசெய்தாலும், எப்படியிருந்தாலும் கடைசியில் எல்லாஞ் சரிதான் என்று ஜனங்கள் நினைக்க இடமிருந்தால், ஒரு தொழிலும் நடவாது; சகலமும் தலைதடுமாறிக் கெடும். ஆதலால் உலகம்

நடைபெறும்பொருட்டு, முயற்சியால் வரும்பலனை மாந்தர் இச்சித்து முயற்சிசெய்ய ஏவப்படும்படிக்குக் கடவுள் முயற்சிக்குத் தகுந்த பலனை அமைத்திருக்கின்றனர். "முயற்சிதிருவினையாக்கும்; முயற்றின்மை இன்மைபுகுத்திவிடும்." இவ்வாறு கடவுள் அமைத்திருப்பதால் அவர் அமைப்பின்படியே முயற்சியால் வரும்பலனை அஃதுடையோர் அநுபவிக்கும்படி இடங்கொடுப்பது நியாயமே. இது நியாயமென்றால், முயற்சியின்மையால் வரும் கேட்டைச் சோம்பேறிகள் அடையும்படி விட்டு, அதனால், அவர்கள் அக்கேட்டுக்கு அஞ்சி "முயலாது வைத்து முயற்றின்மையாலே உயலாகா" என்றுணர்ந்து முயற்சிசெய்ய ஏவப்படும்படி வகைசெய்வது அநியாயமென்று யார சொல்லக்கூடும்?

இந்த நியாயம் ஜனங்களுடைய மனதில் பதிந்து பலன்செய்வதற்கு, மேலையதிகாரத்திற் காட்டிய பாகமும் பாத்தியமுமாகிய இரண்டு விதிகளையும் கைக்கொண்டு நடத்தலைத்தவிர வேறொன்றும் வேண்டியதில்லை. முதலாவது சொத்து பாகிக்கப்பட்டிருந்தால் ஒவ்வொன்றும் ஒவ்வொருவருக்குச் சொந்தமாகிவிடும்; அப்பொழுது அவரவர் தேடினது அவரவர் வசமாவதினால், முயற்சிசெய்து சம்பாதியாதவர்களுக்கு ஒன்றுமிராது. அதனால் ஒவ்வொருவனும் தன்தனக்கென்று பொருள்தேடும்படி முயற்சிசெய்ய அவசியம்நேரிடும். இரண்டாவது: அவரவருடைய பாத்தியம் அழிந்துபோகாமல் பாதுகாக்கப்படுமானால், முயற்சியற்றலைகிற சோம்பேறிகளுக்குப் பிறர்பொருளை அபகரிக்கவாவது, பறித்துக்கொள்ளவாவது, திருடவாவது இடமிராது. ஆதலால் அவர்கள் அப்புறம் என்னசெய்வார்கள்? உதாசக்கினியினிமித்தம் ஏதாவது ஒரு முயற்சிசெய்து ஜீவனம்பண்ணப் பார்ப்பார்கள் என்பதற்கு ஆட்சேபமில்லை. இதனால் தேசத்தில் நல்ல சட்டங்களும், அவற்றின்படி நீதியை நடப்பிக்கிற அதிகாரிகளுமிருப்பது ஜனங்களுக்கு எவ்வளவு பிரயோஜனமானகாரியமென்று காணலாம். மரியாதையும் நாணயமுமுடைய யோக்கியர்கள் தங்கள் முயற்சியால் வரும் பலனை நியாயப்படி அநுபவிக்க இடமுண்டு. சோம்பேறிகளும் இனி வேலைசெய்தாலொழிய உயிர் பிழைத்தற்கு வேறுவழியில்லையென்று கண்டு, பிறர்பொருள்மேல் ஆசைவைப்பதைவிட்டு முயற்சிசெய்து பொருள்சம்பாதிக்க வகையுண்டு. யோக்கியர்கள், நீதிமான்கள், முயற்சியுடையோராகிய நல்லவர்கள் எல்லோரும் எப்

பொழுதும் ராஜாங்கமும் அதன் ஏற்பாடுகளும் அவசியமென்றுணர்ந்து அவற்றிற்கு அநுசரணையாயிருக்கிறார்கள். முயற்சிசெய்து ஜீவனம்பண்ணக் கருதி, அலுவலில ஜாக்கிரதையாயிருக்கிற ஒருவராவது, ஜனங்களுள் அவரவர்க்குச் சொந்தமான சொத்தைக்குறித்தாகிலும், அதன்பேரில் அவர்களுக்கிருக்கிற பாத்தியத்தைக்குறித்தாகிலும் ஒருநாளும் முறையிடக்காணோம். வேலைசெய்ய மனமில்லாத சோம்பேறிகள், வீணர்கள், போக்கிரிகள், தாங்களே பாடுபட்டு உழுது பயிர்செய்து பலனடைவதைவிட்டு மற்றவர்கள் பிரயாசப்பட்டுப் பயிர்செய்து அறுத்துக் களஞ்சியத்திற் சேர்த்ததை அள்ளிக்கொண்டுபோக நினைக்கிற துன்மார்க்கர்களாகிய இப்படிப்பட்டவர்களே எப்பொழுதும் இதைக் குறைகூறக் கேட்கலாம். காரியம் இப்படியிருப்பதால், துன்மார்க்கரான மூடருடைய வீண்வார்த்தைகளைக் கவனியாமல் பொதுப்பட ஜனங்களுடைய நன்மையைக் கருதிச் செய்யும் ஏற்பாடுகளும் ஒழுங்குகளும் சட்டங்களுமே தேசத்திற்கு நன்மையும் பிரயோஜனமுமென்று விளங்குகிறது.

இப்படி எல்லோரும் உழைத்தே ஜீவனஞ்செய்யவேண்டுமென்று ஏற்பாடு இருந்தால், தர்மஞ்செய்கிறதெப்படி? "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று நீதிசாஸ்திரம் முறையிடுகின்றதே; தர்மஞ்செய்யவேண்டியது மனுஷருக்குக் கடமையல்லவா என்று கேட்டால், தர்மஞ்செய்வது மாந்தரனைவர்பேரிலும் விழுந்த கடமைதான்; ஒவ்வொருவரும் அவரவராவியன்றமட்டும் பிறருக்குதவிசெய்யப் பார்க்கவேண்டும். தர்மசிந்தையின்மை மனுஷத்தன்மையல்ல; ஆயினும் தியாகி என்று கைநீட்டிய எவர்க்கும் கொடுப்பது தர்மமென்று சொல்லப்போகாது. பகுத்தறிந்து செய்வதே தர்மமாம். "வறியார்க் கொன்றீவதே ஈகை" என்றார் வள்ளுவர்; "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்றார பிறரும். ஆதலால் ஊழையென்றறிந்து கொடுப்பதே தர்மமாம. ஏழைகள் யாரெனில், தீய்தகப்பனை இழந்து தவிக்கிற சிறுவர்கள், புருஷனை இழந்து பிள்ளைகளை வைத்துக் கஷ்டப்படுகிற விதவைகள், வேலைசெய்ய சக்தியில்லாத பலஹீனர், வியாதியஸ்தர், பாடுபட்டு உழைத்தும் பாரி சமுசாரத்தை வைத்துத் தாங்கமாட்டாத தரித்திரர் முதலானவர்களேயாம். இப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் குறைதீர வேண்டிய அளவு நம்மாலியன்ற உதவிசெய்வது நமது கடமையே.

இதுதான் ஈகை, உபகாரம், வேளாண்மை, தர்மமெனப்படும். இந்தை விட்டு கடாக்களைப்போலக் கொழுதது, வேலைசெய்யத்திராணியிருந்து மனமில்லாமல் சுற்றித்திரிகிற துஷ்டர்களுக்கும், ஓாவுவலும் பாராமல் சுமமாவிருந்து சாப்பிட விருமபுகிற சோம்பேறிகளுக்கும், இரந்துண்பதே தொழிலாகக்கொண்டலைகிற மூடர்களுக்கும் கொடுப்பது தர்மமாகாது. இரந்துண்பதே எங்கள் ஜாதிததொழில், தெய்வம் எங்களை இப்படியே படைத்துவிட்டது என்று சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறவர்கள் அநேகர் இத்தேசத்திலுண்டு. அவர்கள் பேச்சு அபத்தமென்று காட்ட இத்தேசத்து நூலாசிரியர் ஒருவர் சொல்லுகிற உத்தரமே போதும். "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற், பரந்து கெடுக உலகியற்றியான்." இவ்விதசு சோம்பேறிகளுக்கு தர்மஞ்செய்வதினால் அவர்கள் மேலுமேலும் கெட்டுப்போகிறதறகு வழியேயன்றி, சீர்ப்படுகிறதற்கு வகையில்லை. கூடுமானால் நம்மாலானமட்டும் பிரயாசப்பட்டு, அவர்களைச் சீர்திருத்தி வேலைசெய்யத்தக்க ஸ்திதிக்குக் கொண்டுவரப் பார்க்கவேண்டுமேயொழிய, வேறொருவகையிலும் சகாயஞ்செய்யப்படாது. அதற்கும் அவர்கள் இணங்கவில்லையென்று கண்டால், அவர்கள் புத்தியீனத்தால் வருமகேட்டை அவர்களே அநுபவிக்கும்படி விட்டுவிடவேண்டும். நாம் அப்படி விட்டுவிடுவது அவர்கள் புததியடைந்து சீர்ப்படுவதற்கு நல்லவழியாம். வேலைசெய்யாவிட்டால் பட்டினிகிடந்து சாகவேண்டுமேயொழிய, பிழைப்புக்கு வேறு போக்கில்லை என்று காணும்பொழுது எப்படிப்பட்ட சோம்பேறியும் முயற்சிசெய்யப் பழகிக்கொள்வான்.

இதனால் தேகபலமுடையவர்கள் வேலைசெய்யாமல் சும்மா சாப்பிட்டுக்கொண்டிருக்கும்படி செய்கிற எவ்வித ஏற்பாடாவது, அன்னசத்திரமாவது, ஊட்டுப்புரையாவது தேசவாழ்வுக்கு அநுகூலமானதல்லவென்று ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஏற்பாடு சோம்பேறிகளும் வீணருமானவர்களின் தொகையை அதிகப்படுத்தித் தேசத்துக்குக் கேடுசெய்கிறதுமாத்திரமல்ல, முயற்சியுடைய மற்றவர்களையும் தளர்ந்துபோகசசெய்கிறது. இதனால் அப்படி வீண்சோறு தினகிறவாகளுக்காவது நன்மையுண்டோவென்று பார்த்தால், அதைக் கிஞ்சித்தும் காணோம். அவாகள் பிச்சையெடுத்து ஊர்தோறும் சென்று யாசகம்பண்ணி வயிறுவளர்ப்பதைவிட்டு, பாடுபட்டு வேலைசெய்து, அன்றாடக ஜீவனஞ்செய்

வார்களானல், அப்பொழுது முன்னிலும் ஆயிரமடங்கதிகச் சௌக்கியமும், சந்தோஷமும், மரியாதையும் நல்லொழுக்கமுமுள்ளவர்களாய் வாழ ஏதுவுண்டு.

சர்மத்தையும் சுத்தத்தையும் பற்றியது.

சர்மம் அல்லது தோலானது தேகத்தின் மேற்புறத்தையெல்லாம் மூடியிருக்கும் ஓர் விசேஷித்த இயந்திரம். இது சில இடங்களில் அதிகத் தடிப்பானதாயும், சில இடங்களில் சொற்பக் கனமுள்ளதாயுமிருக்கும். அது மூன்று பாகங்கள் அல்லது அடுக்குகளுள்ளது.

க-வது. அதன் மேற்புறத்தில், வெண்காயச் சருகுக்கு ஒப்பான ஓர் மெல்லிய தோலிருக்கிறது. இம்மெல்லிய சருகுதோலுக்கு யாதொரு ஸ்மாணை அல்லது உணர்ச்சியுமில்லை. இதன் பிரயோஜனமென்னவெனில்: அது தனக்கு அடியிலிருக்கும் சர்மத்தின் அதி உணர்ச்சியுள்ள பாகங்களின்மேல் ஒன்றும் படாதபடிக்கு அவற்றை மூடிக் காப்பாற்றுகின்றது. கடினமான வேலை முதலியவற்றினல் இம்மெல்லிய சருகுதோலானது வரவர அதிக உறுதியும் தடிப்புமுள்ளதாகிவிடும். இவ்வாறே மண்வெட்டிவேலைசெய்யும் ஜனங்களுடைய கையிலுள்ள சருகுதோலானது மிகவும் கனத்துக் காய்த்துப்போயிருக்கும். யானை, காண்டாமிருகம் முதலிய சில வகை ஜெந்துக்களின் சருகுதோல் மிகவும் கனத்துக் கடினமாயிருக்கும். சருகுதோலானது தேகத்தின் வெளிப்புறத்திலிருப்பதனல், காற்று உஷ்ட்ணமுதலிய ஏதுக்களால் அது வெகு சீக்கிரத்தில் காய்ந்து கடினமாகி, சர்மத்திற்குரிய உணர்சசி சத்துவத்தைக் கெடுத்துப்போட இடமுண்டு. ஆகையால் இப்படிச் சம்பவியாதபடிக்கு ஒரு நல்ல ஏற்பாடு உண்டாக்கப்பட்டிருக்கிறது. அது என்னவெனில்: சர்மத்திற்குக் கீழே நிணக்கோளங்களென்ற எண்ணிறந்த சிறு கோளங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இக்கோளங்களிலிருந்து நிணக்குழல்களென்ற மிகவும் மெல்லிய நாளங்கள் புறப்பட்டுச் சர்மத்தை ஊடுருவிப்போய், சருகுதோலின் மேற்புறத்தில் முடிகின்றன. இந்நிணக்கோளங்களிலிருந்து எண்ணை போன்ற ஓர்விதக் கொழுப்பானது சருகுதோலின்மேல் இடைவி

டாது புசிந்துகொண்டேயிருக்கும். இக்கொழுப்பின் உதவியினால் சருகுதோலானது காற்றினாலும் உஷ்ட்ணததினாலும் காய்ந்து வறட்சியாகி, வெடித்துப்போகாமல் எப்பொழுதும் மிருதுவாயும் ஓர்விதப் பளபளப்புள்ளதாயும் இருக்கின்றது.

உ—வது. சர்மத்தின் இரண்டாவது பாகம் அல்லது அடுக்குக்கு வர்ணத்தோல் என்று பேர். இது சருகுதோலுக்கு அடியில் அத னோடு ஒட்டியிருக்கிறது. இதில் பலவித வர்ணச்சத்துக்கள் அடங் கியிருக்கின்றன. இவ்வர்ணத்தோலை உபாயமாய்ப் பேர்த்தெடுத் துத் தண்ணீரில் போட்டால், அதிலுள்ள வர்ணச் சத்துக்கள் ஜலத் தில் கரைந்துபோம். இம்மெல்லிய தோலில் அநேகவகை வித்தி யாசமான வர்ணங்களிருப்பதினால்தான் மனிதருக்குள்ளும் அநேக வகை நிறமுள்ள ஜனங்களிருக்கிறார்கள். ஆபிரிகாகண்டத்தி லுள்ள காப்பிரி அல்லது நீக்ரோ ஜாதியாரின் சர்மத்தில் அதி சுக் கறுப்புநிறச் சத்தொன்றிருப்பதினால் அச்சனங்கள் மிகவுங் கறுப்பாயிருக்கிறார்கள், அமெரிக்காகண்டத்திலுள்ள சிவப்பு ஈந்தியர் என்னும் ஜாதியாரின் சர்மத்திலுள்ள வர்ணத்தோலில் ஓர் விதச் சிவப்புநிறச் சத்திருக்கின்றது. ஆனால் இவ்வர்ணத்தோலில் வர்ணச்சத்தொன்றும் முற்றுமில்லாதிருந்தால் அல்லது அதில் மிக வும் சொற்ப அளவான வர்ணமிருந்தால், அப்படிப்பட்ட தோலை யுடைய ஜனங்கள் வெள்ளைநிறமுள்ளவர்களாயிருப்பார்கள். ஐரோப்பாகண்டத்திலுள்ள வெள்ளைக்காரரின் நிறத்திற்குக் கார ணம் இதுவே. சர்மத்தின் மத்தி அடுக்காகிய இம்மெல்லிய வர் ணத்தோலைத்தவிர, சர்மத்தின் மற்றப் பாகங்களிலெல்லாம் கறுப்பு மனிதருக்கும் வெள்ளைமனிதருக்கும் சற்றென்கிலும் வித்தியாச மேயில்லை.

ரு—வது. சர்மத்தின் மூன்றாவது அடுக்குக்கு மெய்யான சர்ம மென்று பேர். இது மற்ற இரண்டு அடுக்குகளைப்பார்க்கிலும் மிகவுங் கனத்தது. இதுவே மிகவும் முக்கியமான பாகம். இதில் தான் எண்ணிறந்த ஸ்மரணை அல்லது உணர்ச்சி நாம்புகள் அடர்த் தியாய்ப் படர்ந்திருக்கின்றது. இவ்வுணர்ச்சி நாம்புகளின் உத வியினால்தான் சர்மத்தின்வழியாக நமக்கு உணர்ச்சியுண்டாகி றது. சர்மத்தின் முக்கிய பிரயோஜனங்களில் ஒன்று உணர்ச்சியே.

விசேஷித்த இயந்திரமாகிய சர்மத்தினால் மிகவும் முக்கியமான வேறொரு பிரயோஜனமுண்டு. அது என்னவெனில்: சாதாரண

மாய் நமது கண்ணுக்குத் தெரியாத எண்ணிறந்த சிறு துவாரங்கள் சர்மமெங்கும் நிறைந்திருக்கின்றன. உள்ளங்கைச் சர்மத்தில் ஒரு சதுர அங்குல இடத்தில்மாத்திரம் ஏறக்குறைய 3,500 சிறு துவாரங்களிருக்கின்றன. இப்படியே தேகமெங்குமுள்ள சர்மத்தில் இத்துவாரங்கள் அடர்ந்திருப்பதைக் காணலாம். இத்துவாரங்களென்னவென்றால்: சுவேதகோளங்களென்ற உருண்டை வடிவமுள்ள எண்ணிறந்த சிறு இயந்திரங்கள் சர்மத்திற்கு அடியில் பதிக்கப்பட்டிருக்கின்றன. இச்சிறு இயந்திரங்களிலிருந்து சுவேதக்குழல்களென்ற மிகவும் மெல்லிய நாளங்கள் புறப்பட்டு, சர்மத்தை ஊடுருவிக்கொண்டுபோய் கடைசியில் அதன் மேற்புறத்தில் முடிகின்றன. இச்சிறு சுவேதநாளங்களின் வாய்களே மேலே சொல்லப்பட்ட சிறு துவாரங்கள். சாதாரணப் பருப்பமுள்ள ஒரு மனுஷனுடைய சர்மத்திலுள்ள வேர்வைத் துவாரங்களின் மொத்தத்தொகை ஏழுகோடியிருக்கும். சர்மத்தை ஊடுருவிக்கொண்டுவருகிற எண்ணிறந்த சுவேதக்குழல்களையெல்லாம் ஒரே வரிசையாக வைக்கக்கூடுமானால், அவைகள் 28 மைல் தூரம் நீளும். இச்சிறு இயந்திரங்களினால் என்ன பிரயோஜனமென்றால்: அவைகள் நமது சரீரத்தில் நிமிஷந்தோறுமுண்டாகிற அசுத்தமும் விஷமுமான தேய்வு கழிவு பதார்த்தங்களை வேர்வை ரூபமாக வெளியே போக்குகின்றன. வேர்வையிலுள்ள அசுத்தமும் விஷமுமான கழிவுபதார்த்தங்கள் எக்காரணத்தினாலாவது தடைப்பட்டு தேகத்திற்குள் கொஞ்சநேரமென்கிலும் தங்குமானால், உடனே சுகங்கெட்டுப் பெரிய மோசங்கள் சம்பவிக்கும். சர்மத்திலுள்ள சுவேதக்குழல்களின் துவாரங்கள் அழுக்கினாலாவது அல்லது வேறெந்தக் காரணத்தினாலாவது அடைபட்டு, அவைகளின் வழியாய் வெளியே நீக்கப்படவேண்டிய விஷபதார்த்தங்கள் சரீரத்திற்குள்ளே நின்றுபோகுமானால், சுகத்திற்கும் ஜீவனுக்கும் பெரிய மோசங்களுண்டாகும். திருஷ்டாந்தமாக: ஒரு மிருகத்தின் சர்மத்தின்மேலெல்லாம் ஏதாவதொருவகை வார்ணிஷைக் கொண்டாவது, அல்லது பிசினைக்கொண்டாவது இடைதெரியாதபடிக்குக் கனமாய்ப் பூசினால், அம்மிருகம் வெகுசீக்கிரத்தில் மரணமடையும். (Pope Lio) லீயோ என்னும் போப்பானவர் ஒரு பிள்ளைக்குத் தேவதூதன் வேஷந்தரிப்பிக்க உத்தேசித்து, அப்பிள்ளையின் மேனி சொர்ணமயமாகத் தோன்றும்பொருட்டு அதன்மே

லெங்கும் தங்கரேக்குகளை ஒட்டுவித்தாராம்; அதனால் அப்பிள்ளை சீக்கிரத்தில் வியாதியடைந்து மரணமடைந்துவிட்டது.

இப்படித் தோலின்மேலுள்ள வேர்வைத்துவாரங்களெல்லாம் ஏககாலத்தில் அடைபட்டுப்போமானால் உடனே மரணம் சம்பவிக்கும்; ஆனால் அத்துவாரங்களில் ஒருபாகமாத்திரம் அழுக்கினாலாவது அல்லது வேறெந்தக் காரணத்தினாலாவது அடைபட்டுப் போமானால், அதினால் சுகத்திற்கு இடையூறுகள் நேரிட்டு, பல வியாதிகள் சம்பவிக்கும். சர்மத்தில் எங்குமடர்ந்திருக்கிற சுவேதக் குழல்களும் நிணக்குழல்களும் நிமிஷந்தோறும் வெளியே கொண்டுவந்து தள்ளும் அசுத்தமும் விஷமுமான சத்துக்கள் நமது தோல்மேலும் நாம் தரித்திருக்கிற வஸ்திரங்களிலும் படிந்துகொண்டே வருகின்றன. இதினால்தான் நமது தேகமும் வஸ்திரங்களும் அதிசீக்கிரத்தில் அழுக்கு முடைநாற்றமுமுள்ளவைகளாய்ப் போகின்றன. ஆகையால்தான் நமது தேகத்தையும் வஸ்திரங்களையும் அடிக்கடி சுத்தமபண்ணவேண்டிய ஆவசியம் நேரிடுகின்றது. இப்படி அவைகளைச் சுத்தம்பண்ணிக்கொண்டுவாராவிட்டால் அவைகளில் படிந்திருக்கும் அசுத்தமும் விஷமுமான பதார்த்தங்கள் மறுபடியும் தோலின்வழியாகத் தேகத்திற்குள் பிரவேசிக்கிறதற்கும், தோலின்மேலுள்ள சிறு துவாரங்கள் அழுக்கினால் அடைபட்டுப் போகிறதற்கும் இடமுண்டாகிப் பெரிய மோசங்கள் சம்பவிக்கும். இதுவுமன்றி, தோலையும் வஸ்திரங்களையுஞ் சுத்தமாய் வைத்துக் கொள்ளாவிட்டால், சொரி சிறங்கு முதலான அருவருப்புந் தொந்தரவுமான தோலைப்பற்றிய பல வியாதிகளுண்டாவதற்கும் ஏதுவிருக்கும்.

ஆபிரிகா பிரயாணம்.

(தொடர்ச்சி.)

வின்டேன் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்ட ஆறுநாளைக்குப் பிற்பாடு கப்பல் பெருத்த வர்த்தகத்துக்குப் பேர்போனவிடமாகிய (Jonkakonda) ஜங்கேகொண்டா பட்டணத் துறைமுகஞ் சேர்ந்து சில சாமான்களை இறக்குமதி செய்யவே, கப்பல் வந்தசெய்தி ஊரெங்கும் பரவிப்போக, மறுநாள் உதயத்தில் பல திக்குகளிலுமிருந்த ஐரோப்பிய வர்த்தகர்கள் தங்களுக்கு அக்கப்பல் வழி

யிர்கவந்த கடிதங்களைப் பெற்றுக்கொள்ளவும், கப்பலிலேற்றிவந்த சாக்குகளின்னதென்று விவரந்தெரிந்துகொள்ளவும், அவை முதல் தரச்சரக்கோ அல்லவோவென்று பரீட்சிக்கவும ஓடிவந்தார்கள். இச்சமையத்தில் கப்பல்தலைவனும் மங்கோபார்க்கின் வரவை டாக்டர் லெயிட்லி என்பவருக்கு அறிவிக்க, அவரிருக்கும் ஊருக்கு ஓர் தூதனை முன்னாடியே அனுப்பியிருந்தார். அதுசங்கதி அவருக்கு எட்டினவுடனே, அவர் புறப்பட்டு மறுநாள் உதயத்தில் கப்பலிருக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தார். மேஸ்டர் பார்க்கென்பவர் தம்முடன் கொண்டுவந்த கடிதத்தை அவர் கையில் கொடுக்க, அவரதை மிக ஆவலுடன் வாசித்துப்பார்த்து சந்துஷ்டியடைந்து, அதிக உபசாரத்துடன் மேஸ்டர் பார்க்கென்பவரை உபசரித்து, அவர் தம் வளவுக்கு வரும்படி விரும்பிக் கேட்டுக்கொண்டு, வழிக்குக் குதிரை காலாட்களை சர்பராபண்ணவே, மேஸ்டர் பார்க்கென்பவர் ஜூலைமீ 5௳ ஜங்கேகொண்டாவைவிட்டுப் புறப்பட்டு, 16 மைல் தூரத்தில் காம்பியாநதி ஓரத்திலிருக்கும் ஊராகிய (Pisania) பீசானியாவுக்கு வந்துசேர்ந்தார். வந்து சேர்ந்ததும், அங்கு வசதியாயுள்ள வாசஸ்தலமாகிய டாக்டருடைய வீட்டில் தமக்கென்று ஒழித்துவிடப்பட்ட ஜாகையில் போய் தங்கியிருந்தார். இந்தப் பீசானியா வூர் வர்த்தகத்துக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஓர் சிறு கிராமம். அது அங்கிலேயரால் குடியேற்றப்பட்டவூர். அவ்வூரில் வாசஞ்செய்பவர்கள் மிகச் சொற்பத்தொகையாகிய ஐரோப்பிய வர்த்தகரும், அவர்கள் ஊழியத்துக்கேவலாட்களாகிய திரளான கறுப்புமனுஷர்களுமே வாசஞ்செய்துவந்தார்கள். அவ்விடத்தில் விசேஷ வியாபாரம் அடிமைகள், தந்தம், பொன்மணல் முதலியவைகளே.

இவ்விதமாய் மேஸ்டர் பார்க்கென்பவர் தம் பிரயாணத்தின் ஆரம்ப பயணமாய் அவ்வூரிற்சேர்ந்து, ஒருவன் தானெடுத்துக்கொண்ட கருமத்தில் கருத்துங்கவலையுமாய் பிரவேசித்து, அதில் நேரிடத்தக்க இடையூறுகளையெல்லாம் முன்னறிந்து, அதற்கு ஏர்க்கனவே ஆயத்தப்பட்டிருப்பவனாகில் அவன் அக்கருமத்தில் சித்திபெறாமல் போகானென்பதை அவர் நன்றாயறிந்திருந்தவராதலால், டாக்டர் லெயிட்லி வீட்டில் வாசம்பண்ணுஞ்சமையத்தில் தம் காலத்தை விருதாவாய்ப் போக்காமல், ஆபிரிகாகண்டத்தைச் சேர்ந்த அப்பிராந்தியங்களில் வழங்கும் (Mandingo) மாண்டிங்

கோ பாஷையை அதிவிநயத்துடன் கற்றுக்கொள்ள உடனே ஆரம்பித்ததுமன்றி, தாம பிரயாணம்பண்ணப்போகும் நாடுகள் ஊர்களைப்பற்றிப் பலகாரியங்களையுங்குறித்துத் தாம் சந்திக்கும் கறுப்புஜனங்களிடத்தில் புத்திபூர்வமாய் விசாரணைசெய்துவந்தார். இவர் விசாரணைசெய்த கறுப்புமனித வர்த்தகர்களில் அநேகர் இவருடைய நோக்கத்தைக் கொலைக்குமெண்ணங்கொண்டு, அவரை ஆதைரியப்படுத்ததக்க வீணும் அபத்தமுமான பற்பல காரியங்களைச் சொல்லி, அவர் ஆபிரிகாகண்டத்தில் பிரயாணஞ்செய்வதுமோசமான ககரியமென்றும், ஆதலால் அவர் தம் நோக்கத்தை விட்டுவிடவேண்டுமென்றும் மிகவும் வற்புறுத்திப் பேசினார்கள். ஆகிலும் அவர்கள் சொன்ன அதைரியவார்த்தைகளை அவர் ஓர் பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல், தாம் கொண்ட நோக்கத்தை எவ்விதமும் நிறைவேற்றவேண்டுமென்ற தீரமான தீர்மானமுள்ளவராய் பிரயாணத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் சிந்தித்து, சர்வஜாக்கிரதையுடன் செய்துவந்தார். இப்படி அவர் செய்துவருகையில், ஒருநாள் இராததிரி அகோரமாய்ப் பெய்த பனி தம்மேல் படும்படி இடங்கொடுத்தமையால் அவருக்கு ஓர்வித கொடிய சுரம் உண்டாயிற்று. அதனால் அவர் மிகவும் வருத்தப்பட்டு, ஏறக்குறைய ஆகீஸ்ட்மாதமுழுமையும் படுக்கையிலே கிடந்தார். அவர் சுகவீனப்பட்டகாலம் மழை தாரைதாரையாய்ப் பொழியும் மாரிகாலமாயிருந்தது. இக்காலங்களில் பெரும்பாலும் பகல்நேரங்களில் சகிக்கக்கூடாத உஷ்ட்ணமும், இரவில் கொடிய காரிருளும் உண்டாயிருக்கும். மேலும் அவ்விராக்காலங்களில் தவளைகள் தலையுடைபடும்படி கத்துதலும், பெருநரிகள் போடும் பெருங்கூச்சலும், ஓனாய்கள் கழுதைப்புலிகளாலுண்டாகும் பயங்கரமான ஊளையிடுதல்களும் இவற்றிற்கிடைக்கிடையே எவருந் திடுக்கிடத்தக்கவண்ணமாய் மற்றெந்த தேசத்திலும் உண்டாகாத பேரிடிகள் முழங்கும் முழக்கங்களுமுண்டாயிருக்கும். இப்படிப்பட்ட காலததில் மங்கோபார்க்கென்பவர் தமக்கு நேரிட்ட கொடிய வியாதியினால் அவஸ்தைப்படுகையில், டாக்டர் லெயிட்லி என்பவர் செய்த பரிகாரமுறைகளினாலும், அவர் வியாதிப்பட்டிருந்த நாட்களிலெல்லாம் இவ்வைத்தியர் அவருடன் கூடவிருந்து, உருக்கத்தையும் பட்சத்தையும் பாராட்டி, அவருடன் செய்த இன்பமான சம்பாஷணைகளினாலும் அவர் மிகுந்த ஆறுதலடைந்தார். பின்பு படிப்படியாய் அவர் வியாதி தணிய தேகசுகத்தையடைந்தார்.

ஆபிரிகாகண்டத்தைச்சேர்ந்த இத்தேசமானது விஸ்தாரமான சமபூமியாயும், நிறைந்தடர்ந்த காடுகளுள்ளதாயுமிருந்தது. அத்தேசத்தில் அலங்காரமானதொன்றும் கண்ணுக்குத் தென்படாதிருந்தும் பூமியானது மிகச்செழிப்புள்ளதாயிருந்தது. அதினால் குடிகள் தங்கள் சொற்பபிரயாசையைக்கொண்டு ஏராளமான தானியவிளைவுகளை அடைவார்கள். அவ்விதமே ஆடுமாடுகளுக்கும் அங்கு அளவற்ற மேய்ச்சலுண்டு. அவ்விடத்தில் நேர்த்தியும் அருமையுமான மீன்கள் விஸ்தாரமாய்ப் படுவதுண்டு. ஆதலால் குடிகள் அவற்றை விசேஷித்த போஜனமாக்கிக்கொள்வார்கள். மேலும் அக்குடிகள் தோட்டந்துரவுகளும், கொல்லைக்காடுகளுமாய் அநந்தமேற்படுத்தி, அதுகளில் வெங்காயம், பெருவள்ளிக்கிழங்கு, வேர்க்கடலை, பறங்கி அல்லது பூசனி, சுரை, தாபோசி அல்லது கொம்மட்டி முதலானதுகளைப் பயிரிடுவார்கள். அவைகளில் சுரை, தாபோசிக்காய் அல்லது கொம்மட்டிக்காய் முதலியவற்றை அத்தேசத்துக் குடிகள் அவித்தும் பச்சையாயுஞ் சாப்பிடுவார்கள். அப்பிராந்தியங்களில் முக்கியமாய் விளையும் தானியங்கள், மக்காசோளமும் நெல்லுமே. சுரைகுடுக்கைகளைத் தங்கள் வீடுகளில் சாப்பிடுகிறதற்கும், குடிக்கிறதற்கும் ஏற்ற விசேஷித்த பாத்திரங்களாக்கி வழங்கிவருவார்கள்.

பட்டணத்துக்குச் சமீபத்தில் பருத்தி, அவுரிச்செடிகளையும் பயிரிட்டு வருவார்கள். அவர்கள் பயிரிடும் பருத்தியினால் தங்களுக்கு வஸ்திரங்களை உண்டுபண்ணிகொண்டு, அவ்வஸ்திரங்களை அவுரி இலைகளிலிறக்கும் நீலச்சாயத்தில் தோய்த்து, நேர்த்தியான நீலவர்ணமும் பகட்டுமான உடைகளை உடுத்திக்கொள்வார்கள். ஜீவாதாரத்துக்குதவுகிற நெல்முதலிய தானியங்களை அவர்கள் பெரிய மா உரல்களில் போட்டுக் குத்தி, உமியைப் போக்கிவிட்டு, தானியமணிகளை மாவாக்கி, அம்மாவை அநேக விநோதமான விதங்களாய்ப் பக்குவப்படுத்திச் சாப்பிடுவார்கள்.

அவர்கள் வீடுகளில் வளர்க்கும் ஜீவஜெந்துக்கள் பொதுவாய் மற்றத் தேசங்களில் இருப்பவைகள்போலவே இருக்கும். அப்பிராந்தியங்களிலுள்ள காடுகளில் பன்றிகளும், வகைவகையான மான் கூட்டங்களுமே மிகுதியாயுண்டு. அக்குடிகள் பன்றிமாம்சத்தைச் சாப்பிடுகிற வழக்கமில்லை. மண்டிங்கோ காட்டிலுள்ள விசேஷித்த காட்டுமிருகங்கள், கழுதைப்புலி, சிறுத்தை, யானைமுதலியவைகளே. ஆபிரிகாகண்டத்தின் இப்பிராந்தியங்களிலிருபப

வர்கள் யானைகளைப்பிடித்து வசப்படுத்தி, சாதுவான ஜெந்துக்களாக்கி மனிதர் வேலைக்கு உபயோகமான மிருகங்களாகப் பழக்கச் சற்றென்கிலும் அறியார்கள். அவர்கள் அம்மிருகங்களை வேட்டையாடி, வெடிகளால் சுட்டு, அவற்றிலுள்ள தந்தங்களை எடுத்து ஐரோப்பியர்களுக்கு விற்பார்கள். அவற்றின் மாம்சத்தையோ வெகு நேர்த்தியும் அருமையுமான போஜனமாகப் பாவித்துப் புகழ்ந்து சாப்பிடுவார்கள். சாமான் தட்டுமுட்டுகள் சுமப்பதற்குக் கழுதையைத்தவிர வேறொன்றையும் உபயோகிக்கார்கள். வேளாண்மைத் தொழில்களுக்கு மிருகஜீவன்களை அவர்கள் உபயோகிக்கிற வழக்கமேயில்லை. மற்றத் தேசங்களில் பூமியைப் பண்படுத்துவதற்கு உபயோகிக்கப்படுகிற விசேஷித்த கருவியாகிய ஏர் எப்படிப்பட்டதென்பதை அவாகள் சற்றென்கிலும் அறியார்கள். அவர்கள் உபயோகிக்கும் விசேஷித்த கருவி ஓர்வித மண்வெட்டியே. அவர்கள் ஆள் அடிமைகளைக்கொண்டே வேளாண்மைக்கடுத்த சகல தொழிலகளையும் நிறைவேற்றிவருவார்கள்.

இத்தேசத்தில் வருஷந்தோறும் மாரிகாலம் கோடைகாலமென இருபருவகாலங்களுண்டு. மாரிகாலம் ஜூலைமாதம் முடிவில் ஆரம்பிக்கும். அதுமுதல் மூன்றுமாதம்வரையிலும் ஓயாமல் மழைபெய்புமாகையால், தேசமெங்கும் வெள்ளப்பிரளயமுண்டாக, பிரயாணிகள் தங்கள் பிரயாணத்தை நிறுத்தி, வேலையாட்கள் தங்கள் வேலைகளைவிட்டோய்வார்கள். இக்காலங்களில் நதிகள் பெருத்த வெள்ளமெடுத்து, இருகரையும் புரண்டு, சுற்று நாடுகளில் பாயும். பிரவாகமாகிய தண்ணீர்கள் வடிந்துபோகுந்தறுவாயில் ஆறுகள் கொண்டுவந்தொதுக்கின வண்டல் மண்கள் பூமியைச் செழிப்புள்ளதாக்கி, கோடைகாலத்தில் பயிர்கள் பலபாகமாகிச் செழிப்பான விளைச்சலையுண்டாக்கும்.

மழைக்காலம் ஓய்ந்தவுடனே மங்கோபார்க்கென்பவர் தமக்கு நேரிட்ட வியாதியினின்று முற்றிலும் சுகமடைந்தார். அவருக்குச் சுகமும் பலனும் உண்டானவுடனே தமது பிரதான நோக்கமாகிய ஆபிரிகா பிரயாணத்தை ஆரம்பிக்க எத்தனித்தார். அக்கண்டத்தின் மத்திப்பாகங்களில் செல்லுகையில் தமக்குத் துணையாக வர்த்தகப்பிரயாணிகளைத் தேடியும் அவர்கள் வருகைத் தாமதமானதினால் அவர்கள் வரும்வரையும் அவர் காத்திருக்கத்தாளாமல் தனிமையாகவே போகத் தீர்மானித்தார்.

ஜீவஜெந்துக்களின் உடைகள்.

வஸ்திரத்தின் பிரயோஜனமென்னவெனில்: க-வது. தேக அனல் சரீரத்தைவிட்டு விரைவாய் நீங்கிப்போகாதிருக்கும்படி செய்கிறது. உ-வது. தூசு முதலிய தீமைசெய்யும் பதார்த்தங்கள் தோலின்மேல் படாதபடிக்குக் காக்கிறது. காற்று, மழை, வெயில் முதலியவற்றினால் தேகததிற்குச் சேதமுண்டாகாதபடிக்குச் சரீரத்தை மூடிக் காப்பாற்றத்தக்க எத்தனமொன்று ஜீவஜெந்துக்களுக்கு அவசியம். மனிதனைத்தவிர மற்ற ஜீவஜெந்துக்கள் தங்கள் தேகத்தைக் காப்பாற்றுவதற்குப் போந்த உடைகளைச் சம்பாதித்துக்கொள்ள அவைகளுக்குச் சக்தியில்லாததினால், இரக்கமும் ஞானமும் நிறைநத கடவுள், இயல்பிலேயே அவைகளுக்குத்தகுந்த உடைகளை ஏற்படுத்தியிருக்கிறார். எப்படியெனில், ஆடு மாடு முதலிய ஜெந்துக்களுக்குத் தோலின்மேல் நெருக்கமாய் முளைத்திருக்கும் மயிரையும், பக்ஷிஜாதிகளுக்குத் தோல்முழுமையும் மூடியிருக்கிற இறகுகளையும், மீன் முதலிய பிராணிகளுக்குச் சிலாம்புகளையும், யானை காண்டாமிருகம் முதலிய ஜெந்துக்களுக்கு மிகவும் கனத்த தோலையும் கடவுள் உண்டாக்கியிருக்கிறார். மிருதுவும் மிகவும் நுட்பமுமான தோலையுடைய மனிதனுக்கு மாத்திரம் இப்படிப்பட்ட இயற்கையான ஏற்பாடொன்றையும் தேவன் கட்டளையிடவில்லை. ஆனால் அவர் மனிதனானவன் தனக்கு அவசியமான உடைகளைச் சம்பாதித்துக்கொள்ளத்தக்கதாக அவனுக்குப் போந்த விவேகத்தையும் திறமையையும் அருளிச்செய்திருக்கிறார்.

மனிதன் தரிக்கும் வஸ்திரங்கள், தேசவித்தியாசம் காலவித்தியாசங்களுக்குத் தக்கபடி வித்தியாசப்பட்டிருக்கவேண்டும். அதிகக் குளிர்ச்சியுள்ள தேசங்களில் வாசம்பண்ணும் ஜனங்கள் மிருகங்களின் தோலினாலும், அவைகளின் கம்பளமயிரினாலும் செய்த உடைகளைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். உஷ்ண தேசங்களிலுள்ளவர்கள், பருத்தி, பட்டு முதலியவைகளாலாகிய வஸ்திரங்களை உடுக்கிறார்கள். எந்த தேசத்திற்கு எந்த உடைகள் அவசியமோ, அந்த உடைகளுக்கு வேண்டிய பொருள்கள் அந்த தேசத்திலேயே உண்டாகும்படி தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். சீதள

தேசங்களில் கம்பளமயிரைக் கொடுக்கிற மிருகங்களுண்டு. உஷ்ட்ணதேசங்களில் பருத்தி பட்டு முதலியவைகள் போதுமானபடி அகப்படும்.

மனிதனைப்போல மற்ற ஜீவஜெந்துக்கள் தேசவித்தியாசம் காலவித்தியாசங்களுக்கு ஏற்க வித்தியாசமான உடைகளைச் சம்பாதித்துக்கொள்ள ஏதுவில்லாததினால், தேவன் அவைகளுக்கு நல்லுஏற்பாடு ஒன்று செய்திருக்கிறார். பூமியின் முனைகளுக்குச் சமீபத்தில் கொடிய குளிர்ச்சியுள்ள இடங்களில் வாசஞ்செய்யும் மிருகங்களினுடைய தோலின்கீழ் ஏராளமான கொழுப்புண்டாயிருக்கின்றது. இவ்விதமாய்த் தேகத்தைப் பொதிந்திருக்குங் கொழுப்பானது குளிர்ச்சி தேகத்திற்குள்ளிருக்கும் இயந்திரங்களைத் தாக்காதபடிக்குத் தடைசெய்கின்றது. ஒருகாலத்தில் அதிகக் குளிர்ச்சியும், மற்றக்காலத்தில் கொஞ்சக் குளிர்ச்சியுமுள்ள இங்கிலாந்து முதலிய தேசங்களில் வாசஞ்செய்யும் மிருகங்களின் தோலின்கீழ் அதிகமான கொழுப்பு உண்டாகிறதில்லை; ஆனால் அவைகளின் தோலின்மேல் நீண்ட கம்பளமயிர் முளைத்திருக்கும். இக்கம்பளமயிரானது அதிகக் குளிர்ச்சியான மாரிகாலத்தில் அதிக அடர்த்தியாயும் நீளமாயும் முளைக்கும். குளிர்ச்சி குறைவுள்ள காலத்திலோ, கம்பளமயிர் மெல்லியதாயும் குறுகினதாயும் போகும். இப்படிப்பட்ட மிருகங்களை உஷ்ட்ணதேசங்களுக்குக் கொண்டுபோனால் அவற்றிற்கு இயல்பான கம்பளமயிர் வரவர உதிர்ந்துபோக, சாதாரண மயிர்மாத்திரம் முளைக்கும்.

ஜனங்கள் காலவித்தியாசத்திற்கு ஏற்றபடி வித்தியாசமான துணிகளாலாகிய வஸ்திரங்களைத் தரிப்பது தேகசுகத்திற்கு அவசியமான காரியம். குளிர்ச்சி தேகத்தைத் தாக்காதபடிக்கு முற்றிலும் விலக்கத்தக்கது பிளானல் முதலிய கம்பளமயிரினாலாகிய துணிகளே. இவைகளுக்கு இரண்டாவது பருத்திநூல் துணிகள். ஆலண்ட் முதலிய சணல்நாரினால் செய்த துணிகள் குளிர்ச்சியைத் தாங்குவதற்கு ஏற்றவைகளல்ல. நமது தேசத்தில் அதிகக் குளிர்ச்சியான காலங்களில்தவிர, மற்றக் காலங்களிலெல்லாம் ஜனங்கள் தரித்துக்கொள்வதற்கு ஏற்றது பருத்திநூல் புடவையே.

மரணமாகிய கிழவன் கதை.

ஓர்நாள் சாயரட்சையில் கார்லென்னுஞ் சிறுவன் தன் வீட்டு வாசற்படியில் உளுக்கார்ந்திருக்கும்போது, மிக வார்த்திகனாகிய ஓர் கிழவன் அத்தெருவழியே வருவதைக் கண்ணுற்ருன். அவனுக்கு நீண்டு வெளுத்து தொங்கின தாடியும், சிலவிடங்களில் மயிர் உதிர்ந்து மொட்டையாயும், மற்றவிடங்களில் வெள்ளிக்கம்பிகள் போன்ற நரைமயிருள்ளதுமான தலையும், திரைந்த முகமும், குழி விழுந்த கண்களும், எலும்புகள் தென்படத்தக்கவிதமாயிருந்த தேகமுமிருந்தன. அவன் தன் கையில் கருக்கரிவாளைப் பிடித்துக் கொண்டு கூனிக் குனிந்து நடந்துபோனன். அவன் தரித்திருந்த நீண்ட அங்கி கறுப்புநிறமுள்ளதாயிருந்தது. இந்த அகோர கோல முள்ள அக்கிழவன் பார்வைக்குப் பயங்காமுள்ளவனுயிருந்தான். அப்போது கார்லென்னுஞ் சிறுவன் அவனைப் பார்த்து: நீ யார்? உன் பெயரென்ன? என்று வினவ, அவன் கிட்டிச்சென்று என் பெயர் மரணமென்ருன். அப்போது சிறுவன்: ஆ! நீ பயங்கா மானவன். என் பிரிய சிறு சகோதரியை சில நாட்களுக்குமுன் என்னைவிட்டுப் பிரித்துக்கொண்டுபோனவன் நீதானு? என்க, விர்த்தன்: ஆமென்று தலையை அசைததான். அது கேட்டு, சிறுவன்: நான் என் சகோதரியைப் பார்க்கவேண்டும். அதனோடு எப்போதுமிருந்து விளையாடவேண்டும். நான் அவளைக் காணுமலிருப்பது எனக்கு எப்பொழுதும் துக்கமாயிருககிறது. நான் எவ்வேளையும் அவளோடு கூடிக்குலாவி விளையாட மிகவும் ஆசையாயிருக்கிறேன். ஆகையால் நீ என்னை என் சகோதரியிடம் இட்டுக்கொண்டுபோவென்ருன். அதற்குக் கிழவன்: அப்பா! நான் உன்னை இப்போது அங்கே இட்டுக்கொண்டு போகக்கூடாது. அவ்விடத்திற்குப்போக உன் காலம் இன்னம் வரவில்லை. எப்படியும் ஒருகாலத்தில் நீ அங்கு வந்துசேர்வாய். என் கையிலுள்ள இன்றையதின ஜாப்தாவில உன் பெயரைக் காணவில்லை. ஆகையால் நான் உன்னை என்னுடன் அழைததுக்கொண்டு போகக் கூடாது என்ருன். இதைக் கேட்ட சிறுவன்; நீ வைத்திருக்கும் அட்டவணையை உன் கையில் கொடுத்ததார் என்க, கிழவன்:

தலைகுனிந்து, என் எஜமானன் அதைக் கொடுத்தார் என்றான். அப்படி நீ என்னை அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்றால், நான் உன்னுடன் சற்றுத் தூரம்வரையினுமாவது வந்து, நீ அழைத்துக்கொண்டுபோகிற ஜனங்களுககு என்ன சம்பவிக்கிற தென்றறிய விருமபுகிறேனென்றான். அப்போது கிழவன்: நான் இதற்குச சம்மதிக்கிறேன். அப்படி வருவது உனக்கும் பிரயோஜனத்தையுண்டாக்கும. ஆனால் நான் உன்னை இட்டுக்கொண்டு போகுமிடங்களில் நடக்கும் காரியங்களைக்குறிதது நீ நன்றாய்க் கவனிபபதுமன்றி, அவசியமில்லாமல் என்னிடத்திலொன்றும பேசாதிருக்கவேண்டும் என்றான். பின்பு மரணமாகிய கிழவன் முன்னிட்டுச் செல்ல, சிறு பிள்ளையாண்டான் பின்னிட்டுப்போனான்.

இவ்வாறு அவர்கள் பட்டணத்துக்குள் உலாவுகையில் எப்பக்கத்திலும் வேடிக்கையும் உல்லாசமுமான காட்சிகள் தோற்றப்பட்டன. எங்கே பார்த்தாலும ஜனங்கள் களிப்பாய் ஆடிப்பாடி, மகிழ்ச்சியாய்க் காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தார்கள. அன்று தினம் ஓர் தனவந்தனின் மாளிகையில் அவனுக்கு ஏகபுத்திரியாயிருநதவளின் மங்களதினமாகையால், அக்கலியாணத்துக்கழைக்கப்பட்ட விருந்தினர்கள் அமக்களமும் கீதவாத்தியங்களின் கொட்டுமுழக்கங்களும் வெகு ஆரவாரமாயிருந்தன. இமமாளிகைக்குள் கிழவன் அரவங்காட்டாமல் உட்பிரவேசித்து, விருந்தினர்கள் நடுவிற் சென்றான். அப்பொழுது விருந்தினர்களிற் சிலர் தங்கள் சந்தோஷப்பெருக்கததில் பெருமிதவாசைகொண்டு புரளுகிறவர்களும், சிலர் தங்கள் ஆடல்பாடல்களில் அக்களிப்புககொண்டவர்களும், வேறுசிலர் அவர்களைப் பார்த்து அகடவிகடமும், சிறிப்புங் கெலிப்புமாய்ப் பேசுகிறவாகளும, பின்னுஞ்சிலர் ஓர் அறைக்குள் உட்கார்ந்து கடுதாசி சதுரங்க முதலியவைகளை அதிவினையத்துடன் ஆடுகிறவர்களுமாயிருந்தார்கள்.

விர்த்தன் இவ்வித உல்லாச வேடிக்கைக் காட்சிகளை உற்றுப் பார்த்து பெருமூச்செறிந்தும், எச்சரிக்கை வார்த்தையொன்றும் உச்சரியாமல் மவுனமாய் நின்றான். பின்பு ஆடல்பாடலில் பரவசப்பட்டிருந்த ஆட்கள் நடுவே அரவமின்றிச் சென்று, அவர்களில் சுகமும் பலமும் எவ்வன சவுந்தரியமுமுள்ள பாலியனொருவனைக் குறித்துக்கொண்டு, தன் கையை நீட்டி ஒருவருமறியாமல் அவனைத் தொட்டான். வாலிபன் முதலில் கிழவன் தன்

னைத் தொட்டதை உணராதிருந்தும், வெகுசீக்கிரத்தில் அவன் முகரூபு வேறுபட்டது. அவன் சுகயீனமடைந்து மூர்ச்சைபட்டுக் கீழேவிழுந்தான். விழவே, அவன் தோழர்கள திடுக்கிட்டு அவனைச் சுமந்துகொண்டு, ஆடல்பாடல் வீட்டினின்று அவன் சொந்த வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தாகள். பின்பு கிழவன் அவ்வீட்டைவிட்டுக் கடந்துபோனுன். இரண்டாவதாகக் கிழவன் அடுத்த தெருவிலுள்ள ஓர் பிரபுவின் வீட்டினுட் பிரவேசித்தான். அவ்வீட்டெஜமான் அலங்காரமாய் ஜோடிக்கப்பட்ட தன்னறையில் உட்கார்ந்து, தன் சிநேகிதர்களுடன் வெகு முயற்சியாய்ச் சூதாடிக்கொண்டிருக்கையில், அவனைத் தெரிந்துகொண்டு அவனைத் தன் விரலினுல் தொட்டான். தொடவே, அவன் அதிசீக்கிரத்தில் ஆட்டத்தைவிட்டு ஓய்ந்து, சுகயீனத்தினுல் தன் படுக்கையிற்போய் விழுந்தான். பின்பு அவன் வியாதி அதிகரிக்கக் காலஞ்செய்தான். அப்பால் கிழவன் பட்டணத்தின் வேறோர் பாகத்தில் நடக்கையில், தெருவில் உட்கார்ந்து மிகுந்த மகிழ்ச்சியாய் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களின் கூட்டமொன்றைக் கண்டு, அவர்கள் நடுவே சென்று அவர்களிலொருவனைத் தொட்டான். பின்பு கிழவன் அவ்விடத்தைவிட்டுக் கடந்துபோக, வியாபாரக்கவலையில் அமிழ்ந்தியிருந்த ஒரு வர்த்தகனைக் கண்டான். அவன் தன் கொடுக்கல் வாங்கலைப்பற்றியும், தன் வியாபாரத்தை எவ்விதமாய் அபிவிர்த்தி செய்யலாமென்பதைப்பற்றியும, இன்னும் எவ்வித நூதன வர்த்தகங்களில் முயலலாமென்பதைபபற்றியும் உள்ள தீராக்கவலைகளில் அமிழ்ந்தி மெய்மறந்தவனுயிருநதான். இவ்விதமாய் இவன் தன் வியாபாரத்தையொழிய வேறொன்றையும்பற்றி நினையாதிருக்குந்தறுவாயில், கிழவன் அரவங்காட்டாமல் அவனருகே சென்று அவனைத் தொட்டான். பின்பு கிழவன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகையில் ஒரு வீட்டுத திண்ணையில் இரண்டு வாலிபர்கள் உட்கார்ந்து தங்கள் படிப்புகளைப்பற்றியும், கல்வி முயற்சியில் தாங்கள் கோரியிருக்கும் கீர்த்தியைப்பற்றியும், கடைசியில் தாங்கள் நாடும் உத்தியோகம் சுகசந்தோஷங்களைப்பற்றியும் மிகுந்த ஆசையுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கிழவன் அவர்களுக்குத் தெரியாமல் சமீபித்துச்சென்று, இருவரில் ஒருவனைத் தொட்டான். இவ்வாறே கிழவன் போனபோன விடங்களிலெல்லாம் இங்கொ

ருவன், அங்கொருவனுக்க ஆட்களின்மேல் தன் கையைவைத்து அவர்களை விழுத்தினான். கிழவன் தான் போனவிடங்களிலெல்லாம் பெருமூச்செறிந்ததைக்கண்டு, கார்லென்னுஞ் சிறுவன் அவனை நோக்கி: நீ ஏன் அடிக்கடி பெருமூச்செறிகிறாயென்றான்? அதற்கவன்: நான் போகுமிடங்களிலெல்லாம் பெரும்பான்மையோர் என் வரவுக்கு ஆயத்தப்படாதவர்களாயிருப்பதைக் கண்டு நான் பெருமூச்செறிகிறேன் என்றான். அதற்குச சிறுவன்: நீ இப்பொழுது வருவாயென்று அவர்கள் சற்றேனும் அறியாதவர்கள் அல்லவா என்றான்? அதற்குக் கிழவன்: நினையாதவேளையிலும், எந்த நிமிஷத்திலும் நான் வரத்தக்கவனென்பதை யாவரும் அறிந்திருக்க வேண்டுமே என்றான். அப்போது சிறுவன்: நல்லது, நீ தொடுபவர்களுக்கு உன்னுடன்வர இஷ்டமில்லாதிருந்தும், அவர்கள் ஏன் உன்னுடன் போகிறார்கள் என்ன, கிழவன்: இவ்விஷயத்தில் அவாகள் இஷ்டமும் விருப்பமுஞ்செல்லாது. என்னுடைய அழைப்புக்கு அவர்கள் கீழடங்கி நடக்கவேண்டியதே அவசியம் என்றான். (இனனும் வரும்.)

சீனர் பாஷை.

இவர்கள் பாஷை விநோதமானது. சீனபாஷையின் நிகண்டு முழுவதிலும் 450 மூல பதங்களுக்கு அதிகமில்லை. இவ்வளவும் ஓர் அசைமொழிகள்தான். எடுத்தல், படுத்தல், ஓசை வேறுபாட்டினால் இவைகள் 1203 சொற்களாகின்றன. அஷ்டதரித்திரம் பிடித்த இந்தப் பாஷையினால் உண்டாகுஞ் சங்கடங்களும் அநர்த்தங்களும் இவ்வளவென்று விவரிப்பது அநாவசியகம். அநேக பதங்களுக்கு ஒரே உச்சரிப்பும், பதம் ஒன்றுக்கும், 40-50 அர்த்தங்கள் வரையும் உண்டு. இதற்கு இலக்கணமென்பது கிஞ்சித்துங்கிடையாது. அதனால் பதங்களின் சம்பந்த சார்புகளை விளக்கும்படி பாஷைகளுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிற பகுதி, விகுதி, சந்தி, விகாரம், வேற்றுமை, வினை முதலிய விதிகளைச் சீனர் கனவிலும் அறியார்கள். பின்னை சொற்களின் சம்மந்தா சம்பந்தங்களை அறிந்துகொள்ளுகிறது எவ்விதம் என்றால்: சொற்கள் தொடர்ந்து முன் பின்னாக நிற்கும் நிலையினாலேமாத்திரம் ஒருவாறு அறிந்து

கொள்ளவேண்டியது. இவர்கள் பாஷையில் நெடுங்கணக்கு அல்லது அட்சரவர்க்கமென்பதுகூட இல்லை. வார்த்தைகளைக் குறிப்பாய்க் காட்டும் அநேக அடையாளங்களும், பல விநோதமான கூட்டெழுத்துக்களுமாத்திரமுண்டு. இவ்வித அடையாளங்களும் அறிகுறிகளும் கொஞ்சமல்ல. 3000,4000, வரையும உண்டாம். இவைகளில சொற்ப அடையாளங்களுக்குமாத்திரம உச்சரிப்பு உண்டு. மற்றவைகளெல்லாம் செவிபபுலனுகாமல் கண்ணுக்குமாத்திரம் புலபபடும் வெறும் அறிகுறிகளாயிருக்கின்றன. இப்படி உச்சரிப்பற்ற அடையாள அடசரங்கள் அளவுக்குமிஞ்சி மிகுத்திருப்பது அப்பாஷையின் வறுமையை விளக்கும் அறிகுறியாயிருக்கின்றது.

சாலமன் என்னும் சக்கரவர்த்தியைப் பற்றியது.

பூர்வீகத்தில் மகா சாலடீன் என்னும் ஒரு துலுக்க சக்கரவர்த்தி இருந்தார். அவர் எகிப்துவை ஜெயித்து, ஐபிராத்து நதியைக்கடந்து, எண்ணிறந்த பட்டணங்களையும் ராஜ்ஜியங்களையும் பிடித்து, கடைசியில் புகழ்பெறத்தக்க ஓர் காரியத்தைச் செய்ய எததனிக்கையில், தமது ஜீவகாலத்தை முடித்தார். அவர் மரிககிறதற்குச் சற்றுமுன் தமது யுத்தங்களிலெல்லாம் தமக்கு முன்பாகக் கொடி பிடித்துக்கொண்டுபோன கட்டியக்காரனை அழைப்பித்து, நீ ஒரு கொடிக்கம்பத்தை எடுத்துவந்து, அதன் நுனியில் என் பிரேதத்தின்மேல் விரிக்கப்படப்போகிற துப்பட்டியைக் கட்டிக்கொண்டு, பட்டணதது வீதிகளில்போய்க் கம்பத்தை நாட்டி, கொடியை விரித்துக்காட்டி, ஜனங்களை நோக்கி: உங்கள் சக்கரவர்த்தியும், அநேக ராஜ்ஜியங்களை ஜெயித்த வீரனுமாகிய பெரிய சாலடீன் என்பவருடைய மகிமைகளிலெல்லாவற்றிலும் அவருக்குரிய சகல சம்பத்துகளிலும், கடைசியில் அவர் தன்னுடன் கொண்டுபோவது இந்தப் பிரேதத்துப்பட்டியேயொழிய வேறொன்றுமில்லையென்று கூறுவாயாகவென்று கற்பித்தார்.

ஒற்றைக்கண் பெண்மான்.

ஒற்றைக்கண்ணுள்ள ஓர் பெண்மானானது தானெப்பொழுதும் கடலுக்கருகிலேயே மேயவேண்டுமென்று தீர்மானித்து, ஓர் தகுந்த இடத்தைத் தெரிந்துகொண்டு, அவ்விடத்தில் மேயும்பொழுதெல்லாம் தனக்குத் தீங்கொன்றும் நேரிடாதிருக்கும்பொருட்டு மிகவும் சாவதானமாயிருக்கும். எப்படியெனில், அது தன் குருட்டுக்கண் பக்கத்தை கடலைப்பார்க்க வைத்துக்கொண்டு, தன்னுடைய நல்ல கண்ணினால் கரைப்பக்கத்தைப் பார்த்துக்கொண்டே மேய்ந்துகொண்டிருக்கும். இவ்வுபாயத்தில் தன் முழுநம்பிக்கையும் வைத்ததினால், எனக்கு இனி ஒரு தீங்கும் நேரிடமாட்டாது, எவர்களாலும் என் பார்வைக்குள் அகப்படுகிறதற்குமுன்னே என்னருகில் வரமாட்டார்களென்று தனக்குள் அடிக்கடி சொல்லிக்கொள்ளும். சிலநாளாய் இம்மானை வேட்டையாட வேண்டுமென்று மிகவும் பிரயாசப்பட்டுவந்த ஓர் வேடனானவன், ஒவ்வொருநாளும் தன் கைக்கு அம்மான் தப்பி ஓடிப்போய்விடுகிறதைக் கண்டு, கடைசியில் அது செய்யும் உபாயததை அறிந்துகொண்டான். பின்பு அவன் ஓர் படகின்மேல் ஏறிக்கொண்டு மானுக்கு நேராகத் தான் வருமட்டும் கொஞ்சதூரம் கடலிலே சுற்றிக்கொண்டுபோய், அதற்குத் தெரியாதபடிக்கு அதற்குச் சமீபமாய் வந்து அதை ஒருதுப்பாக்கியினால் சுட்டுவிட்டான்; உடனே அது கீழே விழுந்தது. அது மரணாவஸ்தைப்படுகையில், ஐயோ' எனக்கு இப்படியா சம்பவித்தது? கடலுக்கருகான பக்கத்தில் என்னை ஒருவனும் சேதப்படுத்தமாட்டானென்று நினைத்தேனே. இப்பொழுது அவ்விடத்தினின்றே எனக்கு மரணகாயம் உண்டாயிற்று; நான் முழுவதும் நம்பின உபாயமே என் சாவுக்கு ஏதுவாயிருந்தது எனக் கூப்பிட்டது.

படிப்பினை.

நாம் பயப்படவேண்டியதில்லை என்று நினைக்குமிடத்திலேயே மிகுந்த பொல்லாங்கு நமக்கு நேரிடவுங்கூடும். ஆகையால் நாம் செய்யும் உபாயங்களில் மிதமிஞ்சின நம்பிக்கையை வையாமல் எப்பொழுதும் எச்சரிக்கையாயிருப்பது விவேகம்.

சமாசாரம்.

பூலோகவாசிகள் தொகை—128,80,00,000; இதில் காக்கேசியர் 36,00,000; மங்கோலியர் 55,20,00,000; எத்தியோப்பியர் 19,00,00,000; மலாயர் 16,60,00,000; அமெரிக்க இந்தியர் 10,00,000. பூலோகத்தில் பலஜாதி மனுஷர் பேசும் பாஷை 3,642; அநுசரிக்கு மதம் 1,000; வருஷாவருஷம் பூவுலகில் மரணமடையும் மானிடர் 3,33,63,333; ஆகவே தினக்கணக்கு 91,554; மணிக்கணக்கு 3,730; நிமிஷக்கணக்கு 62; ஒரு நிமிஷத்[illegible] கைநாடி துடிப்பது 60 முறை. ஆகவே தாது ஒருமுறை அ[illegible], ஒரு உயிர் நீங்கும். மனுஷர் சராசரி வயசு 33; பிரமசாரி[illegible]க்காட்டிலும் சமுசாரிகளுக்கு வயசு அதிகம்; பூலோகவாசிகளில் கிறிஸ்தசமயிகள் 33,60,00,000; இஸ்ரவேலர் 50,00,000; ஆசியகண்டத்தில் வழங்கும் பற்பல சமயிகள் 6,00,00,000; மகமதியர் 19,00,00,000; புறச்சமயவாதிகள் 30,00,00,000.

ஓர் அதிசயமான பிள்ளை.—வட அமெரிக்காவைச் சேர்ந்த மன்தேகியுவில் அதிசயமான ஆண்குழந்தையொன்று பிறந்து, பன்னிரண்டு நாளிருந்து இறந்தது. அதற்குக் கையில்லை; பட்சிஜாதிபோல சிறகு இரண்டு; இருசிறகு முனைகளிலும் விரல் இரண்டு. பெருவிரலும் சுட்டுவிரலும். இதன்றி மற்ற உறுப்புகளனைத்தும் மனுஷனைப்போலக் குறைவற இருந்தன.

மெஜரால் ஔட்ராம் கப்பல் கடலில் முழுகியது.—இக்கப்பல் பம்பாய் நீராவியுரு. இது அடியோடே சமுத்திரத்தில் மூழ்கியது உள்ளம்பதைக்கும் அதிதுயரமும், ஆற்றற்கரிதாகியதுமாகின சங்கதி. இதில் அகால மரணமடைந்தோர் மாலுமி மனைவி, குழந்தை, உபமாலுமி, சிப் என்ஜினீர்; 48 பிரயாணிகள்; கடலோடிகளில் சிலர். இவர்களில் சென்னபட்டணாட்டின் போலீசைச்சேர்ந்த மேஜர் கார்துரையும் இந்தக் கப்பலில் பிரயாணம் பண்ணினவராகையால், அவரும் பிராணசேதமடைந்தாரென்று [illegible]யவருகிறது. இச்சங்கதியைக் கேட்கையில் சென்னபட்ட[illegible] [illegible]களுக்கும், சீமைதேசத்தி

விருக்கிற அவருடைய பந்துஜனங்க ளுக்கும் வெகு துக்கமுண்டாகும். இந்த உருவில் மூழ்கி இற ந்தோரின் மொத்தத்தொகை அறுபது. தப்பிப்பிழைத்தோர் கடலே டிகளில் 17 பெயரும், மாலுமியும், பிரயாணிகள் ஐம்பத்திரண்டுபெ யரில் இரண்டு பெயருமே.

வருமானவரி.—போனவருஷம் வரும னவரிசெலுத்தி, அதன் பளுவைச் சுமக்கக்கூடாமல் வருத்தப்பட்ட குடிகளுக்கு இவ்வருஷமாவது பளுகுறைந்து சுளுவாகுமென் று எண்ணமிட்டபடி குறையுமென்பதற்கோர் ஐயமில்லை. இப்பே பாதுள்ள மூன்றே அணாக்கால் விகிதவரி நிபந்தனைச்சட்டமொழிந்து ... க்கு ஒன்று அல்லது ஒன்றரை விகிதவரி நிபந்தனைச்சட்டப ... படும்போலத் தோன்றுகிறது.

ஐரோப்பியயுத்தம்.—சென்ற ஆறு ஏழு மாசக் காலமாய்ப் பிரான்சியருக்கும் புருஷியருக்கும் நடந்துவருகிற மகா கொடிய யுத்தமானது முடிவுக்குச் சமீபித்துவிட்டதென்கிற செய்தி யாவருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அநேக அபஜெயங்களை அடைந்தும் தங்கள் சத்துருக்களுக்கு ஒருக்காலும் அடங்குவதில்லையென்று உறுதியான தீர்மானஞ் செய்துகொண்டு, யாவரும் அதிசயிக்கத்தக்க வண்ணமாய் அரிய வீரதீரத்துடன் வெகுநாளாய் எதிர்த்து யுத்தஞ்செய்த பிரான்சியர், கடைசியில் தங்கள் சத்துருக்களாகிய புருஷியருக்கு அடங்கும்படி கட்டாயப்பட்டார்கள். புருஷிய சேனைகளால் முற்றிகைசெய்யப்பட்ட பாரிஸ் நகரத்திற்குள்ளிருந்த பிரான்சியர் எதற்கும் அஞ்சமாட்டோமென்று சொல்லி, அநேகநாளாய் வெகு ஊக்கத்துடன் எதிர்த்துநின்றும் அவர்கள் அந்நகரத்திற்குள் சேர்த்துவைத்த உணவுபொருட்கள் வரவர அதிக முட்டுப்பட்டதினால், சகிப்பதற்கு மேலான துன்பங்கள் அவர்களுக்கு நேரிடவே, அவர்கள் சோர்ந்துபோய் சத்துருக்களோடு சமாதானமாக விரும்பி, தங்கள் எதிர்நிலையை விட்டுவிட்டு, பாரிஸ்கோட்டைகளை அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். உடனே யுத்தம் நிறுத்தப்பட்டது. ஆகையால் சீக்கிரத்தில் இருதிறத்தாருக்குள்ளும் நிலையான சமாதானமுண்டாகுமென்று நம்புகிறோம்.